


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் "A Sun from the south என்னும் நூலினை வெளியிட்டார். இந்நூலினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது 'திசைதோறும் திராவிடம்' திட்டத்தின்கீழ், கே.எஸ்.எல். மீடியாவுடன் இணைந்து கூட்டு வெளியீடாக வெளியிடுகிறது. இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு.பி. சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, (பொறுப்பு) மரு. மா. ஆர்த்தி மற்றும் இந்து தமிழ்த்திசை துணை ஆசிரியர் எ.வள்ளியப்பன், புத்தகத்தின் மொழிபெயர்ப்பாளர் ஆர். விஜயசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி சந்தித்து, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 202425–ஆம் நிதியாண்டில் 52 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியதில் 2024 – 25 ஆம் ஆண்டிற்கான மொத்த ஈவுத்தொகையான 15 கோடியே 39 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாயில் இடைக்கால ஈவுத்தொகையாக 4 கோடியே 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஏற்கனவே தமிழ்நாடு அரசிற்கு செலுத்தப்பட்ட நிலையில், தற்போது இறுதிப் பங்கு ஈவுத்தொகையான 10 கோடியே 39 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. கி.சாந்தி, பொது மேலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஆர். நர்மதாதேவி ஆகியோர் உடனிருந்தனர்.

### சர்வதேச அரங்கில் வெற்றிக் கொடி நாட்டி

# தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்த கார்த்திகா - அபினேஷை வாழ்த்தி மகிழ்கிறோம்!

## பஹ்ரைனில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற கபடி வீரர்களைப் பாராட்டி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!






**சென்னை, அக்.25-**

**கபடி வீராங்கனை கார்த்திகா மற்றும் வீரர் அபினேஷ் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

பஹ்ரைனில் நடைபெற்ற 3rd Asian Youth Gamesல், இந்திய கபடி அணி Boys மற்றும் Girls பிரிவில் தங்கப் பதக்கங்களை வென்றது அறிந்து மகிழ்ந்தோம்.

Girls அணியில் சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கை கார்த்திகாவும், Boys அணியில் தம்பி அபினேஷ் மோகன்தாஸும் இடம்பெற்றிருந்தது நமக்கெல்லாம் பெருமை.

தம்பி அபினேஷ் தேனியில் உள்ள நமது SDAT விடுதியில் தங்கி பயிற்சி எடுத்தவர் என்பதும், தங்கை கார்த்திகா எளிய பின்புலத்தில் இருந்து புறப்பட்டு இந்த உயரத்தை அடைந்திருக்கிறார் என்பதும் கூடுதல் சிறப்பு.

சர்வதேச அரங்கில் வெற்றிக்கொடி நாட்டி தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்துள்ள கார்த்திகா மற்றும் அபினேஷை வாழ்த்தி மகிழ்கிறோம். இவர்கள் இருவரும் மென்மேலும் பல வெற்றிகளைக் குவிக்கட்டும்!

இவ்வாறு அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை அறங்காவலர் செய்யது முகமது காஜி ஹுசைன் சாஹிப், நாகூர் தர்கா தலைவர் மற்றும் பரம்பரை அறங்காவலர் காஜி செய்யது முகமது கலிபா சாஹிப் காதிரி ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி

# கீழ்கட்டளை ஏரியில் உபரி நீர் வெளியேற்றம்: முன்னேற்பாட்டுப் பணிகள்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பார்வையிட்டு ஆய்வு!

*பல்லாவரம் அக் 25*

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து தொடர்ந்து கண மழை பெய்து வருவதால் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏரிகள் மழை நீர் கால்வாய்கள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன நமது முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் மண்டல மாமன்ற உறுப்பினர்கள் துறை அதிகாரிகளுடன் சென்று ஆய்வு மேற்கொண்டு மழை. முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் அதன் தொடர்ச்சியாக குரோம்பேட்டை பகுதியில் இருந்து மழைநீர் கால்வாய்கள் வரும் மழைநீர் புத்தேரியில் சேர்ந்து புத்தேரி மடகுகள் வழியாக வெளியேறி அவை கீழ்கட்டளை ஏரியில் சென்றடைகின்றனஅதைத்தொடர்ந்து நிரம்பிய கீழ்கட்டளை ஏரியன் உபரி நீரை அதிகாரிகள் நேற்று திறந்து விட்டனர் அதைச் சென்று பார்வையிட்டு வெளியேறும் கழிவு உபரி நீர் செல்லும் கால்வாய்களை உடனடியாக சுத்தம் செய்து மழை நீர் செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் உபரி நீர் வெளியேறும் பகுதிகளில் உள்ள தாழ்வான பகுதி உள்ள மக்களை முகாம்க ளில் சென்று தங்க வைக்க ஏற்பாடு செய்யுமாறு மாமன்ற உறுப்பினர்களிடமும் அதிகாரிகளிடமும் கேட்டுக் கொண்டார் அதைத்தொடர்ந்து கீழ்கட்டளை காசி விசாலாட்சி புரத்தில் உள்ள நாட்டுக் கால்வாயை பார்வையிட்டு நாட்டுக்கால்வாயை சுத்தம் செய்து அதில் இருந்து மழை நீர் வெளியேறி குடியிருப்பு பகுதிக்குள் புகர் வண்ணம் வருங்காலங்களில் சுற்று சுவர் அமைக்குமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கூறினார் தற்போது மணல் மூட்டைகள் அடுக்கி நீர் வெளியேறாதவாறு தற்காலிக அணை தடுப்பு செய்யுமாறு அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார் அடுத்து பழைய பல்லாவரம் திருத்தணி நகர் அஸ்தினாபுரம் ஆகிய பகுதிகளில் சென்று சென்று அங்கு சாலைகள் தேங்கி இருக்கும் நம் மழை நீரை பார்வையிட்டு உடனடியாக மின் மோட்டார்களைக் கொண்டு மழை நீர்களை வெளியேற்றுமாறும் தற்காலிக சாலைகள் அமைக்க ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் மேடு பள்ளங்களில் வெயிட் மிக்ஸ் மண் பரப்பும் பணிகளையும் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் மேலும் இது குறித்து சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கூறுகையில் முதலமைச்சர் அவர்கள் இரவு பகல் பாராமல் கண் தூங்காமல் பருவமழை பாதிப்பிலிருந்து மக்களை காத்திட வேண்டும் என்ற ஆணையிட்டதுக்கு இணங்க தொகுதி முழுவதும் பருவமழை இருந்து பாதிப்பிலிருந்து பொதுமக்களை காத்திட முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன தாம்பரம் மாநகராட்சி மூலம் மூன்று வார்டுகளுக்கு 20 அதிகாரிகள் ஊழியர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு உள்ளது மேலும் தாழ்வான பகுதியில் உள்ள மக்கள்களை கனமழையிலிருந்து காத்திட முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன பொது மக்களுக்கும் என்னுடைய தொலைபேசி எண்ணை கொடுத்து எந்த நேரத்திலும் என்னை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொ ள் ள ப் ப ட் டு ள் ள து அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மண்டல தலைவர்களும் அதிகாரிகளுக்கும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் தயார் நிலையில் உள்ளனர் என்று கூறினார் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சட்டமன்ற உறுப்பினர் மண்டல தலைவர் மாமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளுடன் ஒவ்வொரு பகுதியாக சென்று துரிதமாக முன்னெச்சரிக்கை நடவடிகைகள் மேற்கொள்வதை பாராட்டி நன்றி தெரிவித்தார்கள்.

அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பொதுப்பணித்துறை நிர்வாக அதிகாரிகள் உதவி செயற்பொறியாளர்கள் மாநகராட்சி உதவி ஆணையர்கள் உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மழை பெய்து வருவதை தொடர்ந்து கீழ்கட்டளை ஏரியில் உபரி நீர் திறந்து வெளியேறுவதை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பார்வையிட்டு வெள்ளநீர் குடியிருப்பு பகுதிக்குள் புகா வண்ணம் மணல் மூட்டைகளை அடுக்கி பாதுகாக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பொதுப்பணித்துறை நிர்வாக அதிகாரிகள் உதவி செயற்பொறியாளர்கள் தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை!

## தடையில்லாமல் குடிநீர் – மூன்று வேளை உணவு வழங்கல்!

சென்னை, அக். 25-

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23.10.2025 அன்று 3181 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது!

22.10.2025 முதல் 23.10.2025 வரை காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் மொத்தம் 4 இலட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது!

தமிழ்நாட்டில் தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் மழைநீர் சூழும் பகுதிகளைப் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள்.

இந்த பருவமழைக் காலத்தில் 17.10.2025 அன்று காலை 8.30 மணி முதல் 24.10.2025 காலை 8 மணிவரை சராசரியாக 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது.

23.10.2025 காலை 8.30 மணிமுதல் இன்று காலை 8 மணிவரை சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 23.10.2025 வரை 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 இலட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட **1,436 மோட்டார் பம்புகள்** தயார் நிலையில் உள்ளன. **150 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகள்** தயார் நிலையில் உள்ளன. **டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள்** பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், பல்வகை பயன்பாட்டிற்கான 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினிஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட **மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் **457 மர அறுவை இயந்திரங்களும்** தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

17.10.2025 முதல் 22.10.2025 வரை மழையின் காரணமாக விழுந்த 31 மரங்களும் அகற்றப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரிவித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழையால் பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட **22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23.10.2025 அன்று 3181 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியம் திருமணம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முகாமை தொடங்கி வைத்து பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு, முன்னாள் ஒன்றியகுழு துணைத் தலைவர் எம்.பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெ. சாக்ரடீஸ், மாவட்ட பிரதிநிதி பா.கந்தன்உள்பட அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.